உ.

சிவமயம்

ஜெயங்கொண்டசோளீசர் துணை.

திருக்குடந்தைச் சிவனடியார்

திருக்கூட்ட ஒன்பதாம் ஆண்டு விழாவில்

துன்முகி ஆண்டு மார்கழித் திங்கள் 23ம் நாள்

தேவகோட்டை சித்தாந்தப் புரவலர் தமிழ் வள்ளல் சைவத்திரு

உ. ராம. மெ. சுப. சேவு. மெ.

மெய்யப்ப செட்டியாரவர்கள்

நிகழ்த்திய

தலைமையுரை.

★

உ
சிவமயம்
ஜெயங்கொண்டசோளீசர் துணை.

திருக்குடந்தைச் சிவனடியார்

திருக்கூட்ட ஒன்பதாம் ஆண்டு விழாவில்

துன்முகி ஆண்டு மார்கழித் திங்கள் 23ம் நாள்

தேவகோட்டை சித்தாந்தப் புரவலர் தமிழ் வள்ளல் சைவத்திரு

உ. ராம. மெ. சுப. சேவு. மெ.
மெய்யப்ப செட்டியாரவர்கள்

நிகழ்த்திய

தலைமையுரை.

உ
சிவமயம்
செயங்கொண்டசோளீசர் துணை.

திருச்சிற்றம்பலம்.

"களித்துக் கலந்ததொர் காதற்
கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் நின்றஇப்
பத்தரைக் கோதில்செந்தேன்
தெளித்துச் சுவையமு தூட்டி
யமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ்செல்வ மாக்கும்
ஐயாறன் அடித்தலமே"

'நீறருத் திருமேனி நெஞ்சரு
ஐந்தெழுத்து நிமலன் பூசைச்
சாறருத் தினப்பணிகள் தடையருக்
கருணைவிழி சாரு மின்சொல்
பேறருச் சைவநெறி பெட்பருப்
பஞ்சகச்சம் பிறங்கு முந்நூல்
வீறரு அக்கமணி மிளிரும்
ஈசானகுரு விரைத்தாள் போற்றி''

திருச்சிற்றம்பலம்.

உ

வணங்கத்தக்க பெரியோர்களே! தாய்மார்களே!!

ஈண்டு எழுந்தருளியிராநிற்கும், எங்கள் ஞானசிரியப் பெருந்தகையவர்கள் பொன்னூர் திருவடிகட்கும் ஏனைய மெய்யடியார்கட்கும் எனதுளங்கலந்த வணக்கத்தைச் செலுத்திக் கொள்ளுகின்றேன்.

இன்று இப்பேரவையின் தலைமைப்பீடத்தில் என்னை அமர்த்த விரும்பியமை கேட்டு எதுவும் கூற என்னுள்ளம் இடமளிக்கவில்லை. பொன்னிப் புனலால், தண்ணொளி பரப்பும் தொன்மைசேர் இத்தலத்தில் எண்ணமும் பொருளும் ஏனைய பிறவும் சிவனடிக்காக்கி அண்ணல் பணியினை ஆண்டொன்பதாக நடாத்தி வரும் இத் திருக்கூட்டத்தின் விழாவில் தகுதியாலும் ஏனைய அறிவாற்றல்களாலும், மேம்பட்ட பலரிருப்ப, எளியேனாகிய என்னை நேற்று எங்கள் ஆசிரியப் பெருந்தகை வீற்றிருந்த பீடத்து அமர்த்த விரும்பிய அன்பர்களின் அன்பின் திறத்தையும், அதை யேற்றுக்கொள்ளுமாறு ஆணையிட்ட எனது ஞானத் தந்தையவர்களின் கட்டளையினையும் காண, சார்ந்தவரைத் தன்மயமாக்குந் தகுதி வாய்ந்த தற்பரனின் திருவருள் நோக்கை

உணர்த்துவான் வேண்டி நிகழ்ந்த பேரருட்செயலே என எண்ணி விம்மித மடைகின்றேன்

சிவாகமங்களிலே, ஆசாரிய மூர்த்திகள் மாணவனுக்கு நிர்வாண தீக்ஷையின் பின் சக்தி தத்துவத்தில் சேர்த்து, எண் குண்ங்களை கை வரச் செய்து ஆசீர்வதித்துத் தன்மயமாக்கி அனுக்கிரஹித்தல் என்பது காணப்படுகின்றது; அவ்வருட் செயலை உலகுணர்தல் செய்த லெனும் கருத்தினிலெழுந்ததே இந்நிகழ்ச்சியென எண்ணுகின்றேன். மற்றும் மூன்றும் நாள் நிகழ்ச்சியின் தலைவரும் இன்றைய சொற்பொழி வாளருமாகிய எனது நண்பர், திருவாளர் ராய. சொ. அவர்களின் இலக்கிய அறிவும் ஆழ்ந்த பயிற்சியும் சுவைநலந் தோய்ந்து பிறர்க் குரைக்குந் திண்மையும் நோக்க நான் அவர்களினும் மேம்பட்டவ னல்லேன் "தன் மகன் சான்றேன் எனக் கேட்டு மகிழ்தல் தாய் தந்தையர்க்கியல்பாகலின் அவ்வழி எனது ஞானத் தந்தையவர் களும், அன்பால் தாயினும் சாலச் சிறந்த மெய்யடியார்களாகிய நீங் களும் சான்றேர்க்கேற்ற இத்தவிசில் என்னையும் ஏற்றிக் கண்டுகளிக்க விரும்பினீர்கள் என்றே எண்ணி, இப் பணியில் திருவருட்டுணை கொண்டு புகுகின்றேன்.

இது போழ்து இத் திருக்கூட்டந் தோன்றக் காரணமாயிருந்து பெருந்தொண்டு புரிந்து வந்தவர்களாகிய சிவ சேனுதிபதி குமாரசாமி செட்டியாரவர்களின் நினைவு என்னுள்ளத்தே எழுகின்கிறது; நம் செட்டியாரவர்கள் சிவவழிபாட்டில் உறைத்து நின்றவர்கள்; சைவ நெறி இலக்கியங்களிலும் ஞானப் பனுவல்களிலும் ஆழ்ந்த புலமை பெற்றவர்கள்; எளிமையே வடிவாய் அமைந்தவர்கள்; இன்சொற் செல்வர்; கூட்டங்களில் சொற்பொழிவாளர்கள் சமய நுண்பொருள் முடிபுகளை விளக்கிச் சொல்லுங் காலத்துத் தாம் ஒருபால் இருந்து ஒருமைப்பாட்டுடன் குறிப்பெடுக்குங் காட்சி என் கண்முன் புலனு கின்றது. அவர்கள் தொகுத்து வைத்துள்ள குறிப்புக்கள் விரைவில் நூல் வடிவில் வெளிவருமாயின் சைவவுலகிற்குப் பெரும்பயன் விளை விப்பனவாகும். அப்பணியில் இங்குள்ள அன்பர்கள் முன் வருமாறு வேண்டிக்கொள்ளுகிறேன். அப்பெரியாரின் அடிச்சுவட்டினைப் பின் பற்றி நாமும் உய்வோமாக

இந்நாள் பரமனையே பாடுவார் நினைவு நாளாய் அமைந்த பொன்னாள். பத்திவலைப் பட்டுப் பத்தராய்ப் பணிந்து, பரமனைப் பாடி, சித்தத்தைச் சிவன்பால் வைத்தல் நம் சமயத்தின் தலையான குறிக்கோளாகும்; மெய்யாற் பணிதல், மொழிபயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து சிவபிரான் சேவடியையே பாடுதல், மனத் தாமரையை அவன் மலரடிக்கே நிலைக்களனாக்குதல் என்று முக்கரண வழிபாடுகளை முறையே நிகழ்த்தி வருதல் ஆன்மாக்களின் இன்றியமையாக் கடமை என்னும் செம்பொருள், இம் மூன்று நாள் நிகழ்ச்சிக் குறிப்புக்களில் வற்புறுத்தப் பெறுதல் எண்ணி எண்ணி மகிழ்தற்குரியது. இக்குறிப்பினையே நமது சேக்கிழார் பெருமான்.

"உரனில்வரும் ஒருபொருளை
உலகனைத்து மானானைக்
கரணங்கள் காணாமல்
கண்ணார்ந்து நிறைந்தானைப்
பரமனையே பாடுவார் ... ..."

என்றுகூறி மகிழ்ந்தார்.

இவ்வுலகில் அநாதி நித்தியப்பொருள்கள் மூன்றெனவும், அவை கடவுள், உயிர், பாசம் என மூவகைப்படும் எனவும் நீங்கள் அறிவீர்கள். ஒருவனாகிய இறைவனை எண்ணிலாதனவாகிய ஆன்மாக்கள் அடைந்து இன்புறுதலும் அவ் வின்பப்பேறு கிட்டா வண்ணம் பாச வயத்தனாய் உழலுதலும், அதன் விளைவாம் துன்பமும் சமயவுண்மைகளில் துறை போகிய சிவபூஜா துரந்தரர்களாகிய உங்கட்கு நான் விரித்துரைக்க வேண்டுவதில்லை.

இந்நெறியே மெய்ந்நெறி என்றும், இந்நெறி சார்ந்தொழுகுதலே ஆன்மாக்களாகிய நம் கடப்பாடு என்றும் நமது தாயுமான அடிகளார்.

''சைவ சமயமே சமயஞ்
சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி
காட்டு மிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி
புகுத வேண்டா முத்தி தருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேர வாருஞ் செகத்தீரே''

என்ற பாடலிற் குறிப்பிட்டருளினர். அந் நெறி நின்றொழுகுஞ் சைவர் களாகிய நாம் நமது சமயச் சின்னங்களாம் திருநீறு, அக்கமணி, முதலியனவற்றை அணியக் கூசுவதும் அன்பில்லாது அதன்மாட்டு விருப்பின்றி அணிதலும் மிக மிக வருந்துதற்குரியன; செத்துப் பிறக்கின்ற சிறு தெய்வ நெறியாளர்கள் தங்கள் பொய்ச்சமய நெறியைப் புகட்ட முயல்வதும் அவ் வலைப்பட்டோர்கள் அச்சமயச் சின்னங்களைக் கழுத்திலும் மார்பிலும் அணிந்துலாவி வருதலும் கண்டும் கூட நம் சமயிகள் திருந்தினர்களில்லை.

இத்திருக் கூட்டத்தினர் ஞாயிறு தோறும் ஆலயங்களிற் சென்று வழிபாடாற்றுதலும் சமயத் தொண்டுகள் செய்து சமய உண்மைகளை யெடுத்துரைத்தலும் போற்றுதற்குரியன. இது போன்ற நற்பழக்கங் கள் நாடெங்கும் தோன்றி வித்தகம் பேசாது பணிசெய்ய முன் வரின் நம் சேக்கிழார் பெருமான் கண்ட ''வென்றி கொள் திருநீற்றொளி யினில் விளங்கும் மேன்மை'' கைவரப் பெறுதல் ஒருதலை.

ஈதன்றிச் சமயக்கண் கொண்டு நோக்காது சமய வரம்பினின்றும் மாறுபட்ட நெறி நின்று மெய்ச்சமயிகள் போல் வேடமுடையார் சிலர் மெய்ப்பொருள் காண விழையாதார்வழிச் செல்லுதலும் அத் தெரு உணர்வினரைத் தெளிவிப்பதாகக் கருதி நம் சமயத்திற்கும் தமிழுக் கும் தீரா இடும்பை விளைவிப்பதுமே நாம் காண்கின்றோம். அந் நெறி யாளர்களை நமது சமயத் தலைவர்களோ ஏனைய அன்பர்களோ இடித்துரையாது வாளாவிருக்கின்றனர்; இந்நாளிலே இது போன்ற

உறவும் செம்மையும் வாய்ந்த சைவத் திருக்கூட்டத்தினர்கள் முன் வந்து கொண்டும் கொடுத்தும் குடிகுடி யீசற்கு ஆட்செய்யும் குழாம் புகுந்து நன்னெறி பரப்ப வேண்டியது மிக மிக அவசியமாகின்றது. நமது சேக்கிழார் பெருமான், சமரச ஞானத்தை யெடுத்துக் கூறும் திறன் காண்போம்.

"தென்றமிழும் வடகலையும்
தேசிகமும் பேசுவன
மன்றினிடை நடம்புரியும்
வள்ளலையே பொருளாக
ஒன்றியமெய் யுணர்வோடும்
உள்ளுருகிப் பாடுவார்
பன்றியுடன் புட்காணுப்
பரமனையே பாடுவார்"

என்ற திரு விருத்தத்தில் ஏனைய மொழிப் பூசல் கட்கும் ஒரே விடையாக மன்றினிடை நடம்புரியும் வள்ளலையே பொருளாகக் கொண்டவர்கள் எம் மொழியில் எவ்வகையில் பாடினும் பரமனையே பரவுவாராய் அமைகின்றார் என்ற கருத்தைத் தெற்றென விளக்குகின்றார்.

மேற் குறித்த திருவிருத்தத்தில் வரும் 'பன்றியுடன் புட்காணுப் பரமன்' என்ற தொடரை அடுத்த சொற்பொழிவின் தலைப்பில் வரும் வில்லி தனது காப்பியத்தில் "ஒரேனந்தனைத் தேட ஒளித்தருளும் இருபாதத் தொருவன்" என்று குறிப்பிட்டுள்ளார்; அவ்வொருவனும் குன்ற வில்லியின் சிறப்பையும் மனங்குளிரப் பாடியுள்ளார். இச் சொற்பொழிவு பரமனையே பாடுவார் நாளில் அமைந்த தெய்வீக நிகழ்ச்சி என்றே கருதுகின்றேன்.

சைவப் பெருமக்களாகிய நீங்கள் அனைவரும் நமது ஒப்பற்ற தலைவராகிய சிவபெருமான் அருளிச் செய்த வேத சிவாகமங்களை இகழாமலும் தெய்வத் திருமுறைகளைப் பேணி வளர்த்தும் சிவஞானச் செல்வர்களாய் விளங்குதல் வேண்டும். மெய்யடியார்களாம் நால்வர் காட்டிய நன்னெறி ஒழுகி, மொழியின வேறுபாட்டுணர்ச்சியற்று,

இறை வழிபாடு மேற்கொளல் வேண்டும். இது போன்ற திருக் கூட்டங்கள் நாடெங்கும் தோன்றுதல் வேண்டும். இருட் சமய நெறி நீங்கி அருட் சமயம் பரவித் திருநீற்ருெளி சிறக்கவேண்டும் என்று அன்றும் இன்றும் என்றுமுள்ள மங்கள நாயகி உடனுய திருக் குடந்தைப் பெருமானின் திருவடிகளே மனமொழி மெய்களால் வாழ்த்தி வணங்கி இம்மட்டிலமைகின்றேன்.

இத்துணைக் காலம் என் சிற்றுரைக்குச் செவி தந்து பொறுமை கொண்டிருந்த உங்களுக்கு என் உளம் இயைந்த வணக்கம் உரிய தாகுக.

சைவத்திறமும் தெய்வத் தமிழும் தழைத்தினி தோங்குக.

வைய நீடுக மாமழை மன்னுக !
மெய்விரும்பிய அன்பர் விளங்குக !
சைவநன்னெறி தாந்தழைத் தோங்குக !
தெய்வ வெண்டிருநீறு சிறக்கவே !

★

விநாயகர் பிரஸ்,
காரைக்குடி.